සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல **DSD/HO/04/Circular/2018**<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ............................................<br>Your No | දිනය<br>திகதி **. 2018.03.07**<br>Date |

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2018/03 (பொருளாதார வலுவூட்டல்)**

சகல மாவட்டச் செலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்.

## <u>பொருளாதார வலுவூட்டலும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டமும்- 2018</u>

**“சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டும் பொருட்டு சமுர்த்தி அருணலு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை”.**

2030ஆம் ஆண்டாகும் போது வறுமையற்ற, வலுவூட்டப்பட்ட சுபீட்சமிகு இலங்கையினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன்னோடி நிறுவனம் ஒன்றாக ஆகுதல் திணைக்களத்தின் நோக்கங்களாகும் என்பதுடன் 2018ஆம் ஆண்டிலிருந்து சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டு அவற்றுக்குத் தேவையான அடிப்படையினை மேற்கொள்வதற்கு திணைக்களத்திற்கு முடியுமாக இருந்தது.

02. இதன் முதலாம் கட்டத்தின் கீழ் தாங்கள் உட்பட சகல சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுப் பொருட்டான **“சமுர்த்தி அருணலு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்”** 2018ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன் இதன் பொருட்டு சகல உத்தியோகத்தர்களும் வழங்கிய ஒத்துழைப்பினை போற்றி மதிக்கின்றேன்.

03. 2018ஆம் ஆண்டில் இதன் இரண்டாவது கட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்தினாலும் சரியாக வலுவூட்டக் கூடிய வறுமானம் பெறும் குழுவினர்கள் சொந்தமான சமுர்த்திக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு ‘‘சமுர்த்தி அருணலு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்’’ செயற்படுத்தப்படல் வேண்டும்.

04. இங்கு திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தல் பிரிவால் வெளியிட்ட சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2018/07 ‘‘சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுதல்’’ மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஒத்ததாக தயாரிக்கப்பட்டுள்ள வருாமனக் குழுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்ந்த வருமானக் குழுவினை ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளல் வேண்டும்.

05. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களில் ஈடுபடச் செய்ய உத்தேசித்துள்ள ஒவ்வொரு குடும்பத்தின் பொருட்டு சாத்தியத்தகவு பகுப்பாய்வினை (SWOT ANALYSIS) மேற்கொண்டு ஒவ்வொரு கருத்திட்டத்தின் பொருட்டும் கருத்திட்ட அறிக்கையினைத் தயாரித்தல் வேண்டும். (சாத்தியத்தகவு பகுப்பாய்வு மற்றும் கருத்திட்ட அறிக்கையினை தயாரிக்கும் போது பயன்படுத்தக் கூடிய இலகுவான உதாரணங்கள் இணைப்பு 1,2 என்ற வகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.)

06. அவ்வாறு தயாரிக்கும் கருத்திட்ட அறிக்கையானது 04 பிரதிகளைக் கொண்டதாக தயாரித்து மூலப் பிரதியினை பயனாளிகளும் ஏனைய பிரதிகளை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், வங்கி முகாமையாளர், மற்றும் தலைமையக முகாமையாளர் ஆகியோர் வைத்துக்கொள்ள வேண்டியதுடன் கருத்திட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கும் பின்பணி ஆய்வு

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இவ்வுத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

07. இங்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் குறித்த தொழில்நுட்ப உதவிச் சேசவையினை வழங்கும் ஏனைய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டிணைப்புடன் வருமானத்தினை விருத்தி செய்யக் கூடிய வாழ்வாதாரக் கருத்திட்டங்களை இனங்கண்டு சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு கருத்திட்டங்களை திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும்.

08. அதே போன்று **<u>2017ஆம் ஆண்டின் கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட குடும்பங்களை இவ்வாண்டிற்குள் தெரிவு செய்தலாகாது,</u>** என்பதுடன் அவர்களுக்கான ஏதேனும் மூலதானத் தேவைப்பாடுகள் இருப்பின் அதனை சமுர்த்தி சுழற்சிக் கடன் நிதியத்திலிருந்து அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் கடன் மூலமாக நிறைவேற்றிக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

09. அத்துடன் 04இல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானமட்டத்தின் கீழுள்ள, வருமான சீர் நிலையிலுள்ள குடும்பங்கள், குறைந்த வருமான மட்டத்திலிருந்து கூடிய வருமான மட்டத்திற்கு எடுத்துக் செல்லும் பொருட்டும் சுழற்சிக் கடன் நிதியங்கள் மற்றும் சமுதாய அடிப்படை வங்கிக் கடன்கள் மூலம் ஏதேனும் ஒரு வேலைத்திட்டத்தினை 2018ஆம் ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் அதனை 2019ஆம் ஆண்டில் இந்த வேலைத்திட்டத்தின் அடுத்த கட்டமாக செயற்படுத்தும் பொருட்டு தங்களுக்கு ஒரு சிறந்த உதவியினை வழங்கும்.

10. **சமுர்த்தி மக்களை வலுவூட்டச்செய்ய செயற்படுத்த வேண்டிய கருத்திட்டங்கள்.**
அதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் அல்லது அதன் பிரிவுகளுக்குறிய எந்த ஒரு வெற்றிகரமான கருத்திட்டத்தினையும் செயற்படுத்துவதற்கு இதன் பிரகாரம் தங்களுக்கு ஆலோசனைகளை வழங்குகின்றேன்.

**விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.**

- சிறியளவிலான தேயிலைப்பயிர்ச் செய்கையினை ஊக்குவித்தல்.
- உள்நாட்டு உணவுப் பயிர்ச் செய்கை மேம்பாடு(உதாரணம்: உளுந்து, பாசிப்பயறு, குரக்கன்)
- சந்தையினை நோக்காக் கொண்ட மரக்கரி மற்றும் பழச்செய்கைகள்.
- வெட்டு மலர் மற்றும் அலங்கார மலர்கள்
- காளான் பயிர்ச் செய்கை
- தேனி வளர்ப்பு (வணிக ரீதியாக)
- நாற்று மேடைகள் மற்றும் அவற்றினை மேம்படுத்துதல்
- பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் மேம்பாடு
- பாதுகாப்பான உள்ளக அரங்குகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள்
- பருவமல்லாத காலத்துப் பயிர்ச் செய்கைள்
- சிறியளவிலான விவசாயத்துறைக் கட்டமைப்பு

**கால் நடை வளர்ப்பு வேலைத்திட்டங்கள்.**

- பால் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்தல்
- மாட்டுத்தொழுவங்களை நிர்மாணித்தலும் மேம்படுத்தலும்
- முட்டை உற்பத்திக் கருத்திட்டங்கள்
- ஏனைய கால் நடை வளர்ப்புக் கருத்திட்டங்கள் (உதாரணமாக ஆடு வளர்ப்பு போன்றவைகள்)

**மீன்படிக் கைத்தொழில் அபிவிருத்தி**

- உணவின் பொருட்டு குட்டைகளில் மீன் வளர்த்தல்
- அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் கடல் தாவர உற்பத்திகள்
- கருவாடு, மாசிக் கருவாடு, மீன் சாடியிடல் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட மீன்பிடி உற்பத்திகளின் மேம்பாடு
- சிறு மீன்பிடிக் கைத்தொழிலை உயிர்ப்பித்தல்.

**சிறு கைத்தொழில்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.**

- சிறயளவிலான தாணிய அரைப்பு ஆலைகளை உருவாக்குதல்.
- கையடக்கத் தொலை பேசி திருத்ததல், மற்றும் தொடர்பாடல் நிலையங்களை அரம்பித்தல்.
- பனை, தென்னை, தித்துள் சார்ந்த உற்பத்திகள்
- களிமண் சார்ந்த உற்பத்திகள்

- ❖ இலகுபொறிக் கைத்தொழில்கள் (கம்மாலை (இரும்புக்கொல்லன்)/ ஒட்டுக் கைத்தொழில் போன்றவை)
- ❖ பிரதானமான உற்பத்திக் கைத் தொழில்களுக்குத் தேவையான துணைப்பொருட்களை உற்பத்தி செய்தல்.
- ❖ ஒட்டோ மொபைல் சேவை (மோட்டார் தொழில்நுட்பக் கலை, டின்கரின், நிறம் பூசுதல், இயந்திரம் திருத்துதல், சேவை நிலையங்கள், குஷன் (இருக்கை/ வேலைத்தளங்கள்)

➢ வலுவூட்டக் கூடிய பயனாளிக் குடம்பங்களின் பொருட்டு வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு துணைபுரியும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டத்தின் பொருட்டு கவனத்தினைச் செலுத்தலாம் அங்கு அத்தேவைபாடுகளின் தொகையினைக் குறிப்பிட்டு அதனை நியாயப்படுத்தும் பொருட்டு கருத்திட்ட அறிக்கையுடன் மதிப்பீட்டினை சமர்ப்பித்தல் வேண்டும்.

11. **தொழிலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பயிற்சி பாடநெறிகள் வேலைத்திட்டம்**

சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் பாடசாலைக் கல்வியினை பூர்த்தி செய்து தொழில்படையில் இணையும் 18 இற்கும் 35இற்கும் இடைப்பட்ட வயதியினையுடைய இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்த முடியும் என்பதுடன் ஒவ்வொரு நபரும் நேரடியாக தொழிலை இலக்காக் கொண்ட தொழிற்பயிற்சிகளில் ஈடுபடச் செய்வதன் ஊடாக அச்சமுர்த்திப் பயனாளிக் குடும்பத்தினையும் வலுவூட்டச் செய்ய முடியும் என்பதனை விசேடமாக சுட்டிக் காட்டுகின்றேன்.

அதன் பிரகாரம் குடும்பங்களை வலுவூட்டச் செய்யக் கூடிய உயர்ந்த பங்களிப்பினை கவனத்திற்கொண்டு தங்களது மாவட்டத்திற்கு இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகின்ற மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து 15%த்தினை இக்கருத்திட்டத்தினை செயற்படுத்த பயன்படுத்துவது தொடர்பில் கவனத்தினைச் செலுத்துவது மிகப் பொருத்தமானதாக அமையும்

எமது திணைக்களத்தினால் ஏலவே 03ம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆரம்ப கலந்துறையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதனால் நேரடியாக தொழிலை இலக்காகக்கொண்ட அப்பாடநெறிகளின் பொருட்டு தங்களது மாவட்டங்களின் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் இளைஞர் யுவதிகளை ஈடுபடச் செய்வதற்கு கூடிய கவனத்தினைச் செலுத்தல் வேண்டும்.

12. **பொதுவான ஆலோசனைகள்.**

I. முடியுமானளவு ஒவ்வொரு பிரிவும் பிரதிநிதித்தவப்படுகின்ற பிரகாரம் கருத்திட்டப் பயனாளிகளை இனங்காணுதல் வேண்டும்.

II. உத்தேச ஒவ்வொரு கருத்திட்டப் பயனாளிகளினதும் வீட்டுத் தோட்டத்தினை ‘‘சமுர்த்தி மாதிரி வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் 2018’’ மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் அபிவிருத்தி செய்வது அத்தியவசியமானதாக அமையும்.

III. கருத்திட்டத்தின் பொருட்டு இனங்காணப்படுகின்ற பயனாளி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்துவத்தினை பெற்றிருப்பது கட்டாயமானதாகும்.

IV. அப்பயனாளிகள் இருவருட இறுதியில் போற்றத்தக்க விதத்தில் கூடிய வருமான நிலைக்கு வந்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்ட குடும்பம் ஒன்றாக பெயரிட வாய்ப்புகள் உள்ளதா என்ற சாத்தியவளத்தினை விசேமடாக பரீட்சித்துப் பார்த்து உத்தேச கருத்திட்ட செயற்பாட்டில் ஈடுபடச் செய்வது அத்தியாவசியமானதாகும்.

V. சமுர்த்தி பயனாளியை வறுமையிலிருந்து மீட்டெடுத்துக் கொள்ளும் பொருட்டு பொருளாதார, சமூக, அரசியல், உடல் உள, மற்றும் சட்ட ரீதியாக வலுவூட்டப்படல் வேண்டும் என்பதனால் இம்முறை பயனாளிகளை கருத்திட்டங்களில் ஈடுபடச் செய்யும் போது அவை தொடர்பில் கவத்தினைச் செலுத்துவது அத்தியவசியமானதாகும்.

VI. அத்துடன் வலுவூட்டல் என்பது சுயமாக தனது சமுர்த்தி நிவாரண உரித்துப் படிவத்தினை தன்னை விட மிக வறுமானம் குறைந்த ஒருவருக்கு வழங்கும் பொருட்டு திணைக்களத்திற்கு வழங்குவதாகும் என்பதுடன் அவ்வாறின்றி சமுர்த்தி நிவாரண உரித்தாளியின் விருப்பமின்றி அதனை இடைநிறுத்துவதல்ல என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றேன்.

VII. மேலே 05இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தயாரிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கையினை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பில் மீளாய்வுக்குட்படுத்தி அங்கீகரித்துக்கொள்ளல் வேண்டும். மேலும் குறித்த நேரொத்த நிறுவனங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபாரிசுகளையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், வலய முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர்கள் சிபாரிடன் தலைமையக முகாமையாளருக்கு அந்த அறிக்கையினை சமர்ப்பித்தல் வேஎண்டும்.

VIII. தலைமையக முகாமையாளரால் குறித்த கருத்திட்ட அறிக்கையின் பொருட்டு தனது சிபாரிசுடன் பிரதேச ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டிருப்பின் அதன் இணக்கப்பாட்டினையும் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IX. ஆகக் குறைந்த 40%மாவது பயனாளிகளின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அது உழைப்பு, மூலப்பொருள், அல்லது பிரிதொரு பங்களிப்பாகவும் இருக்கலாம்.

X. பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளை நிதி ஒதுக்கீட்டிளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி/ மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

XI. மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி/ மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் தனது நிதி ஒதுக்கீட்டு வரையரைக்கு உட்பட்டதாக சரியாக இனங்காணப்பட்ட வலுவூட்டக் கூடிய அங்கீகரித்த கருத்திட்டங்களின் பொருட்டு 04ஆம் இணைப்பின் மூலம் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து கட்டுநிதியினை கோருதல் வேண்டும்.

XII. கருத்திட்டத்தினை ஆரம்பித்தல், தொடர்ச்சியாக நடாத்திச் செல்லல், பயனாளிகளின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளல் என்பவற்றினை உரிய பிரகாரம் மேற்கொள்வதாக பயனாளியடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். பிரதேச செயலாளர் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள சமுர்த்தி தலைமையக முகாமையாளர், பயனாளிகளிடம் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்வது அத்தியவசியமானதாகும். (அதன் பொருட்டு மாதிரி ஒன்று 05ஆம் இணைப்பு மூலம் காட்டப்பட்டுள்ளது.)

XIII. பயனாளிப் பங்களிப்பின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி ஊடாக வாழ்வாதார சுழற்சிக்கடன்களை வழங்குவதனை ஒருங்கிணைப்பு செய்ய வேண்டியதுடன் அதற்காக அந்த வங்கிளின் சட்டதிட்டங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

XIV. தொழிற்பயிற்சி பாடநெறிகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகளினது கருத்திட்டங்களின் பொருட்டு அத்தியவசியமான விடயத்தோடு இணைந்த பயிற்சி வேலைத்திட்டங்களை வழங்க வேண்டியறப்பட்டால், முறைப்படியான திட்டமிடல் ஒன்றினை சமர்ப்பித்து பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

XV. இக்கருத்திட்டத்தினை செயற்படுத்தும் போது அரசாங்கத்தின் அங்கீகரித்த பெறுகைச் செயற்பாடுகள் (Procumend), நிதிப் பிரமாணம், இச்சுற்றறிக்கையின் அலோசனைகளுடன் ஏற்புடைய ஏனைய சுற்றறிக்கை ஆலோசனைகளையும் பின்பற்றி செயற்பட வேண்டியதுடன் பொதுவான விலைமறுக்களையும் கவனத்திற்கொண்டு உரிய நேரொத்த நிறுவனங்களின் சிபாரிசுகளையும் பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்வது அத்தியவசியமானதாகும்.

XVI. சகல கருத்திட்டங்களுக்கும் மேற்கொள்ளவேண்டிய கொடுப்பனவுகளை 2018.12.15ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கக்கூடிய பிரகாரம் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். காலத்திற்கு ஏற்ப ஆரம்பிக்கப்பட வேண்டிய கருத்திட்டங்கள் தவிர்ந்த (உதாரணமாக விவசாயம்) ஏனைய கருத்திட்டங்களை முடியுமான வரை விரைவாக ஆரம்பிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

XVII. கருத்திட்டங்களை மார்ச் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் இனங்கண்டு கொள்ளல் வேண்டும்.

XVIII. மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி/ மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் தனது மாவட்டத்திற்குள் செயற்படுத்தப்பட வேண்டிய வாழ்வாதார பிரேரணைகள் தொடர்பில் ஒட்டு மொத்தக் கவனத்தினையும் செலுத்துதல் வேண்டும். மாதாந்த முன்னேற்றத்தினை மீளாய்வு செய்து மிகப் பயனுறுதி வாய்ந்ததாக கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டியதுடன் தங்களது மாவட்டத்திற்கான “இலக்கினை” அடைந்து கொள்ளும் பொருட்டு நிதமும் கவனத்தினைச் செலுத்துமாறு இத்தால் சுட்டிக்காட்டுகின்றேன்.

13. **கால வரையறை**

| தொ. இல | செயற்பாடுகள் | திகதி |
|---|---|---|
| 1 | உத்தியோகத்தர்களை விளக்கமளிப்பதும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளளும். | 2018.01.15 திகதியிலிருந்து |
| 2 | சுற்றறிக்கை வெளியீடு | 2018.03.08 ஆம் திகதிக்கு முன்னர் |
| 3 | கிராமிய மட்டத்தில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து கருத்திட்டத்தினை இனங்காணுதல்/ கருத்திட்டத்தினை திட்டமிடல்/ (கருத்திட்ட அறிக்ககை தயாரித்தல்) மற்றும் உரிய சிபாரிசுகளை சமர்ப்பித்தல் | 2018.03.25 ஆம் திகதிக்கு முன்னர் |
| 4 | கருத்திட்டத்தினை அங்கீகரித்துக் கொள்ளல் | 2018.03.30 |
| 5 | கட்டநிதி கோரல் | 2018.03.30 |
| 6 | கருத்திட்டத்தினை ஆரம்பித்தல் | 2018.03.30 ஆம் திகதியிலிருந்து |
| 7 | முன்னேற்றத்தினை அறிக்கையிடல் | மாதாந்தம். |

14. **கருத்திட்ட மேற்பார்வை, நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள்.**

I. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை ஈ.சமுர்த்தி செயற்திட்டத்தில் (e-samurdhi project) உள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் முகாமைத்துவ மொடியூலில் (Project and Programme Management Module) உட்படுத்தவும் முன்னேற்றத்தினை குறிப்பிட்ட பிரகாரம் உரிய தினத்திலேயே இற்றைப்படுத்தவும் கருத்திட்ட முகாமையாளர் இவ்வாண்டிலிருந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது அத்தியவசியமானதாகும்.

II. கருத்திட்ட மேற்பார்வை மற்றும் பின்பணி தொடர் ஆய்வு முறைகளை தங்களால் தயாரித்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் பிரதேச மட்டத்திற்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குவது முக்கியத்தவமானதாகும். பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்ளவேண்டியதுடன் தேசிய மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டங்களிலும் கலந்து கொள்வது அத்தியாவசியமானதாகும்.

III. இங்கு சமுதாய அடிப்படை அமைப்பினையும் கருத்திட்ட மேற்பார்வையின் பொருட்டு கலந்து கொள்ளச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிதுடன் சமூக ரீதியான கணக்காய்வு ஒன்றின் பொருட்டு தேவையான ஒரு சூழலை உருவாக்கிக்கொள்ளல் வேண்டும்.

IV. தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரகாரம் கருத்திட்டக் தரவுகள், தகவல் மற்றும் புகைப்படங்களை தயாரித்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

V. தொழிலை இலக்காகக்கொண்ட தொழில் பயிற்சி வேலைத்திட்டத்திற்கமைய பயனாளியை தொழலில் ஈடுபடுத்தப்படும் வரைக்கும் பெற்றகடனை செலுத்தி முடிக்கும் வரையிலும் சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக தொடர்ச்சியான பின்பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும். எவரேனும் பயனாளி ஒருவர் இடைநடுவில் தொழில் பயிற்சியினைப் பெறுவதனை இடைநிறுத்துவதாயின் குறித்த நிறுவனத்திற்கு செலுத்திய திணைக்களத்தின் பங்களிப்பினை மீளப் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரகாரம் ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

15. **நிதி ஒதுக்கீட்டினை விடுவித்தல்**
ஒரு பயனாளிக் கருத்திட்டத்தின் பொருட்டு அங்கீகரிக்கக்கூடிய உயர்ந்தபட்ச திணைக்களப் பங்களிப்பானது ரூபா 45000/= வாகும் என்பதுடன் தங்களது மாவட்டத்திற்கு ஒதுக்ககப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டளவு இத்துடன் தங்களுக்கு அறிவித்து அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அங்கீகரித்த திறைசேரி நிதி ஒதுக்கீடு அளவுகள் மற்றும் வாழ்வாதார சுழற்சிக் கடன் நிதியத்தினை பிரயோகித்துக் கொண்டு தங்களது மாவட்டத்தில் சரியாக வலுவூட்டக்கூடிய பயனாளிகளின் அளவு அல்லது அதிலும் கூடிய அளவில் ''வழங்கப்பட்டுள்ள அபிவிருத்தி இலக்குகளை'' அடைந்து கொள்வது சகல உத்தியோகத்தர்களின் கடமைப்பொறுப்பாகும்.

16. **நிருவாகச் செலவுகள்.**
கருத்திட்டத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் அரசாங்கச் செலவிலிருந்து 2.0%த்தினை நிர்வாகச் செயலக செலவளிக்க முடியும். இதில் 0.8%த்தினை மாவட்டச் செயலகத்திற்கும் எஞ்சிய 1.5%த்தினை பிரதேச செயலகத்திற்கும் என்ற பிரகாரமாகும்.

17. **வினைத்திறன் நடவடிக்கைகள்**

I. 2018ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் வினைத்திறன் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பில் முக்கிய கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

II. இங்கு ஒவ்வொறு உத்தியோகத்தராலும் தமக்கு குறிப்பிடப்பட்டுள்ள கடமை நடவடிக்கைகளை வெற்றிகரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் நிறைவேற்றுவதற்காக வினைத்திறனிற்கான மதிப்பீட்டு முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து சமுர்த்தி வேலைத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளான வறுமையினை ஒழிக்கும் அரசாங்க கொள்கையினை வெற்றிகரமாக செயற்படுத்த உத்தேசித்தள்ளமையும் விசேடமாக சுட்டிக்காட்டகின்றேன்.

அச்சுற்றறிக்கை தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் 011-2873801/ 011-2869824/ 011-2872253 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ அல்லது divinegumalh@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ அல்லது பொருளாதார வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன
பணிப்பாளர் தலைமையதிபதி.

பிரதிகள்:-

1. சமூக வலுவூட்டல்கள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் கௌரவ அமைச்சர் திரு.எஸ்.பி. திஸாநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
2. சமூக வலுவூட்டல்கள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் கௌரவ பிரதி அமைச்சர் திரு.ரஞ்சன் ராமநாயக்க அவர்கள் -த.கூ.க. பொருட்டு
3. சகல மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் -த.கூ.க. பொருட்டு
4. சகல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் -த.கூ.க. பொருட்டு
5. செயலாளர் - சமூக வலுவூட்டல்கள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் -த.கூ.க. பொருட்டு
6. மேலதிக செயலாளர் (கிராமிய அபிவிருத்தி /சமுர்த்தி) சமூக வலுவூட்டல்கள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் -த.கூ.க. பொருட்டு
7. சகல பிரதேச செயலாளர் -த.கூ.க. பொருட்டு, உ.ந. பொருட்டும்
8. கணக்காய்வுத் தலைமையதிபதி, கணக்காய்வுத் தலைமையதிபதி திணைக்களம் -த.கூ.க. பொருட்டு
9. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -த.கூ.க.பொருட்டு உ.ந.பொருட்டும்
10. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
11. சகல பிரிவுத் தலைவர்கள்- ச.அ.திணைக்களம் - த.கூ.க. பொருட்டு உ.ந. பொருட்டும்
12. சமுர்த்தி தலைமையக முகாமையாளர் - உ.ந. பொருட்டும் மற்றும் மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர்/ சமுர்த்தி கருத்திட்ட/ சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் பொருட்டும்.

Translated By: - M.M.M. Jawhar (Translator)

**இணைப்பு 01**

## சாத்தியன் தகவுப் பகுப்பாய்வினை மேற்கொள்ளல்

2018ஆம் ஆண்டின் கருத்திட்டங்களைத் தெரிவு செய்யும் போது **சாத்தியத்** தகவுப் பகுப்பாய்வு ஒன்றின் மூலம் குறித்த பயனாளிக்குடும்பத்திற்கு பொருத்தமான கருத்திட்டம் ஒன்றினை தெரிவு செய்து கொள்வது தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி கீழ் காட்டப்படும் மாதிரியினை முன்வைக்கின்றேன்.

| பலங்கள் (+) | பலவீனங்கள் (-) |
|---|---|
| • தந்தைக்கு தச்சுத் தொழில் செய்ய முடியுமாகவுள்ளது.<br>• தாய்க்கு இனிப்புப் பண்டங்களை தயாரிக்க முடியும்.<br>• மகனுக்கு ஒட்டுத் தொழில் தொடர்பான ஆற்றலுன்மை.<br>• உயர்கல்வி கற்கும் பிள்ளைகள் உள்ளமை.<br>• சமூக அங்கீகாரம். | • மது பாவனைக்கு பழக்கப்பட்டிருத்தல்<br>• புகைத்தல்<br>• சோம்பேரித்தனம்<br>• தேவையற்ற செலவுகள் அதிகமாவுள்ளமை<br>• பின்தங்கிய மனநிலை<br>• முறையற்ற விதமும் தூய்மையின்னையும் |
| **வாய்ப்புகள் (+)** | **அச்சுறுத்தல்கள் (-)** |
| • பிரதான பாதையினை முன் நோக்கி வீடு அமைந்துள்ளமை<br>• பயிர் செய்யக்கூடிய காணிவசதிகள் உள்ளமை<br>• இலகுவாக நீர் கிடைக்கின்றமை<br>• ஆற்றுக்குப் பக்கத்தில் அமைந்துள்ளமை | • வழக்குகளில் சிக்கியிருந்துள்ளமை<br>• பணவீக்கம்<br>• இடைத்தரகர்களின் வற்புறுத்தல்கள்<br>• வெள்ளப்பெருக்கு<br>• வரட்சி/ மண்சரிவு<br>• தச்சுத் தொழல் செய்யும் ஏனையவர்கள் உள்ளமையும் |

**எடுகோள்கள்**

I. மேற்படி பகுப்பாய்வுக்கமைய அக்குடும்பத்தினை வலுவூட்டும் பொருட்டு கருத்திட்டம் ஒன்றினை தெரிவு செய்யும் போது அவர்களுக்கு தச்சுத் தொழில் செய்யக்கூடிய ஒரு கொட்டிலை அமைத்துக்கொள்ள நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

II. அவரின் துனைவியருக்கு இனிப்புப்பண்டங்களைத் தயாரிக்க ஆற்றல்கள் உள்ளதனால் அவருக்குத் தேவையான ஆரம்ப உபகரணங்களை வழங்கி இனிப்புப்பண்டங்களைத் தயாரிப்பதங்கான கருத்திட்டம் ஒன்றினை செயற்படுத்த முடியும்.

III. மகனுக்கு ஒட்டுத்தொழிலை மேற்கொள்ள ஆற்றல் இருந்தும் முறைப்படியான ஒரு பயிற்சி இல்லாததன் காரணமாக தொழிற்பயிச்சி நிலையம் ஒன்றுடன் தொடர்புபடுத்தி அவருக்குப் பயிற்சியினையும் அதன் பின்னர் அரசாங்க தொழிற்சாலையில் இணைப்புச் செய்வதன் ஊடாக நிரந்தரமான தொழில் ஒன்றினை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

IV. அத்துடன் அவனது சோம்பேரித்தனத்தைப் போக்கச்செய்தும் இந்த வேலைத்திட்டத்தில் இணைப்புச்செய்வதன் ஊடாக மேற்கொள்ளமுடியும்.

V. தகப்பன் மதுபானம் மற்றும் புகைப்பிடித்தல் பாவனைக்குள்ளாகியுள்ளதனால் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அதிலிருந்து மீட்டெடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

VI. வீட்டிலிருந்து கொண்டு இனிப்புப்பண்டங்களைத் தயாரிக்கும் தாய்க்கும் ஒய்வு நேரங்களில் தந்தைக்கும் தனது வீட்டுத்தோட்டத்தை பயிரிட்டுக்கொள்ளத் தேவையான அலோசனைகளை வழங்க வேண்டும்.

**இணைப்பு 02**

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

## சமுர்த்தி அருனலு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் -2018
## சமுர்த்தி குடும்ப அலகுகளை வலுவூட்டச் செய்வதற்கான கருத்திட்ட அறிக்கை.

**1.** மாவட்டம்:- ..........................................................................................................................

**2.** பிரதேச செயலகப் பிரிவு:- ..........................................................................................................

**3.** கிராம உத்தியோகத்தர் பிரிவு: ...................................................................................................

**4.** கருத்திட்டப் பயனாளியின் பெயர்: ..............................................................................................

**5.** முகவரி: ......................................................................................................................................

..............................................................................................................................................

**6.** தேசிய அடையாள அட்டை இலக்கம்: ...........................................................................................

**7.** தொலைபேசி இலக்கம்: ....................................... கையடக்கத் தொலைபேசி: ..............................

**8.** சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவரா என்பது பற்றி: .........................................................

**9.** கருத்திட்டத்தின் தன்மை: .............................................................................................................

**10.** கத்திட்டப் பணனாளிகளின் நோக்கு (20** ஆண்டுகளில் வலுவூட்டப்பட்ட ஒரு குடும்பம்): .........

..............................................................................................................................................

**11.** பணி: ........................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

**12.** கருத்திட்டத்தின் நோக்கத்தினை சுருக்கமாக விபரிக்கவும்:....................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

**13.** செயற்பாடுகள்
(சாத்தியத்தகவுப் பகுப்பாய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பிரேரணைகளுக்கமைய இனங்காணப்பட்ட கருத்திட்டங்களுக்கு)

| தொ. இல | செயற்பாடுகள் | பயனாளி (பிரதான குடியிருப்புகள்/ மனைவி/ மகன்) | கருத்திட்டத்திற்குத் தேவையான மொத்த தொகை ரூபா | கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி | கருத்திட்டத்தினை பூர்த்தி செய்யும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**14.** கருத்திட்டத்திற்குத் தேவையான உள்ளீடுகளும் செலவுகளும்

| செயற்பாடுகள் | நிதி உள்ளீடு | | | தற்பொது பெறும் வருமானம் | கிடைக்க உத்தேசித்துள்ள வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பயனாளி | திணைக்களம் | சுழற்சி நிதியம் | | |
| | | | | | |
| | | | | | |

**15.** கருத்திட்டத்தின் மூலம் வழங்கக்கூடிய நேரடித் தொழில் ஆற்றல்கள்:- ☐

மறைமுகதொழில் வாய்ப்புக்கள் ☐

**16. தலைவர்/ செயலாளர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு**

மேற்படி தகவல்கள் நான் அறிந்த வரை உண்மையானதும் சரியானதும் என தெரிவித்துக் கொள்வதடன் இக் கருத்திட்டத்தின் மூலம் வலுவூட்டப்பட்ட குடும்பம் ஒன்றாக மாதாந்த வருமானத்தினை விருத்தி செய்து கொள்வதற்கு இனங்குவதாகவும் கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா ........................................... இற்கான தொகையினை வழங்குமாறும் வினயமுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி: ................................. பயனாளியின் கையொப்பம் : .......................................................

**17. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்:-**

மேற்படி பயனாளி எமது சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி கருத்திட்டத்திற்குறிய தகவல்களை பரீட்சித்ததடன் கருத்திட்டத்தினை வழங்குபது பொருத்தமானது என முன்மொழிகின்றேன். அத்துடன் கருத்திட்டத்தினை வழங்குவதனூடாக பயனாளியை வலுவூட்டப்பட்ட குடும்பம் ஒன்றாக அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................................... ...........................................................................

தலைவர்/ செயலாளர்/ சமுர்த்தி சமுதாய

அடிப்படை அமைப்பு பெயர், கையொப்பம்

கையடக்கத் தொலைபேசி இலக்கம்:- ..........................................................

**18. கருத்திட்ட முகாமையாளர்:-**

மேற்படி கருத்திட்டம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல் பரீட்சிக்கப்பட்டதுடன் இக்கருத்திட்டத்தினை வழங்குவது பொருத்தமானது என முன்மொழிகின்றேன். அத்துடன் கருத்திட்டத்தினை வழங்குவதன் ஊடாக பயனாளியை வலுவூட்டப்பட்ட குடும்பம் ஒன்றாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:- ............................. ...........................................................................

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

பெயர் மற்றும் கையொப்பம்.

கையடக்கத் தொலைபேசி இலக்கம் :- .........................................................

**19. வலய/ வங்கி முகாமையாளர்:-**

மேற்படி கருத்திட்டம் தொடர்பில் முன்வைக்கடிப்பட்டுள்ள தகவல்களுக்கமைய களப் பரிசோதனையினை மேற்கொண்டதுடன் இக்கருத்திட்டத்தினை வழங்குவது பொருத்தமானது எனவும் கருத்திட்டதினை வழங்குபதன் ஊடாக பயனாளியை வலுவூட்ட முடியும் எனவும் சிபாரிசு செய்கின்றேன்.

திகதி:-.......................... ............................................................

கருத்திட்ட முகாமையாளரின் பெயரும் கையொப்பமும்.

கையடக்கத் தொலைபேசி இலக்கம்: ........................................................

**20. தலைமையக முகாமையாளர்:**

மேற்படி கருத்திட்டம் தொடர்பில் முன்வைக்கடிப்பட்டுள்ள தகவல்களுக்கமைய களப் பரிசோதனையினை மேற்கொண்டதுடன் இக்கருத்திட்டத்தினை வழங்குவது பொருத்தமானது எனவும் கருத்திட்டதினை வழங்குபதன் ஊடாக பயனாளியை வலுவூட்ட முடியும் எனவும் சிபாரிசு செய்கின்றேன்.

திகதி:-.......................... ............................................................

வலய முகாமையாளரின் பெயரும் கையொப்பமும்.

கையடக்கத் தொலைபேசி இலக்கம்: ........................................................

**21. பிரதேச செயலாளர்/ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்:-**

மேற்படி தகவல்களைப் பரீட்சித்ததுடன் குறித்த எடுகோள்களுக்கமைய இக்கருத்திட்டத்தின் பொருட்டான கருத்திட்ட மதிப்பீட்டுத் தொகையிலிருந்து ரூபா: ............................................ தொகையினை வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

திகதி: ............................................. ............................................................

தலைமைக முகாமையாளர் பெயரும் கையொப்பமும்

கையடக்கதொலைபேசி : -.......................................................................

**22. மாவட்டச் செயலாளர்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி**

மேற்படி தகவல்களை பரீட்சித்ததுடன் குறித்த எடுகோள்களுக்கமைய இக்கருத்திட்டத்தின் பொருட்டு கருத்திட்ட மதிப்பீட்டுத் தொகையிலிருந்து ரூபா ....................................... தொகையினை வழங்குவது அங்கீகரிக்கப்படுகின்றது/ அங்கீகரீக்கப்படவில்லை.

திகதி: ............................................. ............................................................

பிரதேச செயலாளர்

கையொப்பமும் பதவி இலச்சினையும்.